உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரி ஸமய திவாகரம்.

தொகுதி க. ரக்தாக்ஷி ஹு சித்திரைமீ பகுதி ச.
Vol. 1. April & May 1924. No. 4.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

(63-ம் பக்கத் தொடர்ச்சி.)

வேதத்தின் கர்மபாகத்திற்கும், பிரும்மபாகத்திற்கும் முறையே அர்த்த விசாரமாக வியாஸ சிஷ்யரான ஜைமினியாலும், வியாஸராலும், செய்யப்பட்ட பூர்வ மீமாம்ஸையும், உத்தரமீமாம்ஸையும், இரண்டுங்கூடி ஒரே சாஸ்திரமாகும். இதனை (க) ஸம்ஹிதமேதத்சாரீரகம் ஜைமிநீயேந ஷோடசலக்ஷணே நேதிசாஸ்த்ரைகத்வஸித்தி:'' என்று போதாயந வ்ருத்தியிற் சொல்லியிருப்பதாலறியலாம். ஆகவே அவை யிரண்டும் பரஸ்பரம் விருத்தங்களென்றாவது, வெவ்வேறு சாஸ்திரங்களென்றாவது கொள்ளக் கூடாது.

இனி இதிஹாஸங்களுள் பாரதத்திற்காட்டிலும், ராமாயணம் சிறந்த பிரமாணமாகும். இதனை, பட்டர் அருளிச்செய்த ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில் (உ) "ராமாயணவந் மஹாபாரதமபி சரணம்" என்று ராமாயணத்தைத் திருஷ்டாந்தமாகக் காட்டியிருப்பதாலறியலாம்.

இனி, புராணங்களுக்குள் ராஜஸ தாமஸ புராணங்களைக் காட்டிலும், ஸாத்விக புராணங்கள் மேலானவைகள். அவற்றின் விபாகக்கிரமமும், நிரூபிக்கலாகும்.

புராண ப்ரவர்த்தகரான ருஷிகள் பிர்மாவிடஞ்சென்று எங்களுக்குப் புராண தத்வங்களைச் சொல்லவேணுமென்று கேட்க

(க) இதன் பொருள் :- ஜகத் சரீரகனான பரமாத்மாவைச் சொல்லுகிற இவ் வேதாந்த சாஸ்திரமானது ஜைமினியாலே சொல்லப்பட்ட பதினாறு அத்யாயங்களோடு கூடின பூர்வ மீமாம்ஸையோடே பொருந்தினதா யிருக்கையாலே, இவ்விரண்டும், ஒரு சாஸ்திரமென்று ஸித்திக்கிறது; என்பதாம்.

(உ) இதன் பொருள் :- ராமாயணம்போல மஹாபாரதமும் பிரமாணமாகக் கொள்ளத்தக்கது; என்பதாம்.

"நான்முக்குணவயத்தன் ஸத்வம் தலையெடுத்தபோது நாராயணனைப் பிரதிபாதிக்கிற புராணங்களையும், ரஜோகுணத்தின் வயமானபோது என்னுடைய பெருமையைப் பேசும் புராணங்களையும், தமோகுணத்தின் வயமானபோது அக்கினி சிவன் இவர்களுடைய பெருமையைப்பேசும் புராணங்களையும், சொல்லுவேன்; இவற்றுள் ஸத்வம் தலையெடுத்தபோது சொல்லிய புராணங்கள் உண்மையுரைப்பதிற் சிறந்தவைகளாம்; மற்றப் புராணங்களில் ஸாத்விக புராணங்களோடு மாறுபாடில்லாத பகுதிகளே மெய்யுரைகளாம்." என்றிவ்வாறு பிர்ம்மா சொன்னதாகக் (௩) கூர்மபுராணங் கூறுவதால் ஸாத்விக புராணங்கள் மேலானவைகளாம்.

இனிச் சொற்கள் பொருள்களை யுணர்த்துமாறு காட்டப்படும். பாலர்களுக்குத் தாய் தந்தை முதலானவர்கள் ஓரோர் பொருளைச் சுட்டிக்காட்டி, அததற்குரிய சொல்லைச் சொல்லிப் பயிற்றுதலால் உண்டாகும் சப்தார்த்த ஸம்பந்தஜ்ஞாநத்தை (சொற்பொருளுணர்ச்சியை)ப் புத்தி பூர்வக வியுத்பத்தியென்று சொல்லப்படும். இவ்வாறன்றி ஒருவன் ஒருவனை ஒரு காரியத்திலேவும்போது, ஏவுவோன் சொல்லுஞ்சொற்களையும், இயற்றுவோன் செய்யுங் காரியங்களையுங்கண்டு இச்சொற்கு இது பொருளென்றுணர்தலை யாத்ருச்சிக வ்யுபத்தி யென்பர். இவ்வாறு ஒவ்வொரு சொல்லும் அததற்குரிய பொருளையுணர்த்தி முடியும் சொல்லாற்றலை (சப்தவ்ருத்தியை)ப் பரியவஸாநவிருத்தியென்று வழங்குவர்.

சரீரத்தையுணர்த்துஞ் சொற்களும், குணத்தையுணர்த்துஞ் சொற்களும், ஜாதியையுணர்த்துஞ் சொற்களும், அவற்றையுணர்த்தும் அவ்வளவில் நில்லாமல் முறையே சரீரத்தையுடைய ஜீவனையும், குணங்களையுடைய பொருள்களையும், ஜாதிக்குப் பற்றுக்கோடான (ஆசிரயமான) வடிவத்தையும், உணர்த்துவனபோல ஒவ்வொரு சொல்லும் அதனதன் பொருளுணர்த்தியவளவில் நில்லாமல் அவ்வப் பொருள்களையெல்லாம், உடலாகவுடைய ஸர்வேசுவரனளவிற் செல்லும் சொல்லாற்றலை (சப்தவிருத்தியை) அபர்யவஸாநவ்ருத்தி என்பர்.

---

(௩) இதற்குக் கூர்மபுராண வசனம்:-
"அக்நே: சிவஸ்யமாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்யதே:
ராஜஸேஷு ச மஹாத்ம்யம் அதிகம் ப்ருஹ்மணோவிது:
ஸாத்விகேஷ்வத கல்பேஷு ச மஹாத்ம்ய மதிகம்ஹரே:
தேஷ்வேவயோக ஸம்ஸித்தா கமிஷ்யந்திபராங்கதிம்"

எப்படி தேவதத்தன் என்ற பெயர் தேவதத்தனது சரீரத்தை யுணர்த்தி, அதற்கபிமானியாயுள்ள ஜீவனையுமுணர்த்துமோ அப்படியே அந்த ஜீவனுக்கும் அந்தர்யாமியான ஈசுவரனையுஞ் சொல்லுமாகையால், உலகவழக்கான சொற்களும், வேதவழக்கான சொற்களும், ஸர்வேசுவரனைச் சொல்லத் தட்டில்லை.

இப்படியான அபர்யவஸாநவிருத்தி யிருந்தபோதிலும்; கோத்வம், கடத்வம், சரீரம் முதலான சொற்கள் ஈசுவரனை யுணர்த்தாமல் கோத்வம், கடத்வம், சரீரம் என்னும் அப் பொருள்களையே யுணர்த்தும். நீல: சுக்ல: தேவதத்த: என்பனபோன்ற சொற்கள் ஒருகால் நீல ரூபத்தையும், சுக்ல ரூபத்தையும் தேவதத்த சரீரத்தையும், முறையே உணர்த்தியும், ஒருகால் இவைகளையுடைய பொருள்களையும் உணர்த்தியும் நிற்கும். இவ்வாறான சொற்பொருளாற்றல்களை இடங்கண்டுகொண்டு லௌகிக வைதிக வாக்கியார்த்தங்களை யறியவேண்டும்.

இனி, பாஷா நிரூபணம்.

ஸம்ஸ்கிருதம் தேவபாஷையாகையால் மேன்மையுடையதே; திராவிடபாஷை பிசாசபாஷையாகையால் தாழ்வுடையதாகும்; ஆகவே அதிலுள்ள பிரபந்தங்களும் பிரமாணமாகும்படி எங்ஙனே என்னில்? தாழ்வுடைய பாஷையானாலும் (ச) "ஹரிகீர்த்திம் விநைவாந்யத் ப்ராஹ்மணேந நராதம, பாஷாகாநம் நகாதவ்யம் தஸ்மாத் பாபம் த்வயாக்ருதம்" என்னும் மாத்ஸய புராண வசனத்தின்படி பகவத்விஷயமாகையாலும், ஸம்ஸ்கிருதம்போல் அநாதியாகையாலும்

(ச) பகவத் குணங்களைத் தமிழ்ப்பாட்டாலே பாடிக்கொண்டிருந்த ஒரு பிராமணனைக்கண்டு, வேதகானம் உனக்கு விஹிதமாயிருக்கச் செய்தே அதைவிட்டு நீ பாஷாகானம் பண்ணுவது அகிருத்தியமென்று தண்டித்த ஒரு ராஜாவுக்கு, அந்திமகாலம் வந்தவாறே யமகிங்கரர்கள் வந்து அந்த ராஜாவை யமதர்மனிடம் கொண்டுபோய் விட, அந்த ராஜா யமதர்மனைப் பார்த்து இங்கே வருவதற்கு நான் என்ன பாபம் செய்தேன்? என்று கேட்க, அப்போது, "பிராமணனால் ஹரிகீர்த்தனமல்லாத பாஷாகானம்தான் செய்யலாகாது; யார்க்கும் ஹரிகீர்த்தனமான பாஷாகானம் செய்வது தோஷமாகாது; ஆகையால் தோஷமில்லாமலே ஹரிகீர்த்தனம் பண்ணின பிராமணனைத் தண்டித்ததனால் நீ பாபம் செய்தவனானாய்" என்று யமதர்மன் சொல்லியபடி.

102

அகஸ்தியர் இப்பாஷைக்குப் பிரவர்த்தகராகையாலும், "(ரு) ஸம்ஸ்க்ருத ச்ருதயோயத்வ த்ராமிட ச்ருதயஸ்ததா" என்கிற பிரமாணத்தாலும் தோஷமில்லையென்று கொள்ளத்தக்கதே.

மேலும் ஸம்ஸ்கிருதபாஷையே கொள்ளத்தக்கதென்றால் ஜைந பௌத்த சாஸ்திரங்களும் கொள்ளத்தக்கதாக வேண்டும்; ஆதலால் பாஷைகளைக் கொள்ளுதலும், விடுதலும் விஷயங்களைப்பற்றியவையாம். இந்த விஷயங்களை வேதாந்தாசார்யர் பாதுகா ஸஹஸ்ரத்தில் (சு) "விந்த்யஸ்தம்பாத விஹதகதே: விஷ்வகாசாந்தவிந்தோ: கும்பீஸூநோ ரஸூர கபளக்ராவிந: ஸ்வைரபாஷா" என்றும், த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவளியில் (எ) "வேதாநாகஸ்த்ய பாஷா வபுஷ உததரத்ச்ரேயஸே ப்ராணிநாம்ய:" என்றும் அருளிச்செய்திருக்கிறார். ஈட்டிலும் இவற்றிற்குப் பரிஹாரம் அருளிச்செய்திருப்பது கண்டுகொள்ளத்தக்கதே.

இனி, பிரபந்தங்களுக்கு வக்த்தாக்களான ஆழ்வாராதிகளுடைய அவதார விஷயம் விசாரிக்கலாகும்.

ஆழ்வாராதிகள் நித்யஸூரிகளுடைய அவதார விசேஷங்களென்று புராணாதிகளிற் சொல்லுகின்றன. அதை அநுஸரித்து திவ்யஸூரிசரிதையிலும், குருபரம்பரா ப்ரபாவத்திலும், சொல்லியிருக்கிறார்கள். ஆறுலும் ஈட்டிலும் ஆசார்ஹ்ருதயத்திலும் ஆழ்

(ரு) ஸம்ஸ்கிருத பாஷயிலுள்ள வேதங்கள் எப்படி நித்யங்களாயும் பிரமாணங்களாயு மிருக்கின்றனவோ? அப்படியே த்ராவிட பாஷையிலுள்ள பிரபந்த ரூபங்களான வேதங்களும் நித்யங்களாயும். பிரமாணங்களாயு மிருக்கின்றன.

(சு) ஹே பகவத் பாதுகாய்! விந்திய பர்வதத்தைத் தடுத்தபடியாலே தடையில்லாமலெங்கும் செல்ல வல்லவராயும், ஸமுத்ர முழுவதையும் ஆசமன தீர்த்தமாயள்ளியுண்டவராயும், வாதாபி என்கிற அசுரனை கபளீகரித்து விழுங்கியவராயும், கும்ப ஸம்பவராயுமிருக்கிற, அகஸ்த்யருடையதாய் ஸ்வேச்சையாலே வந்திருக்கிற நித்தியமான திராவிட பாஷையானது சடகோப ரூபியான உன்னுடைய திருப்பவளத்தில் நின்று வெளிப்புறப்பட்டு புராதனமான வேத ஸமூஹங்களுக்கும் மூந்தியெண்ணத் தகுந்ததாயிருக்கிறது.

(எ) (இ-ள்) யாவரொருவர் லோகோஜ்ஜீவனார்த்தமாக வேதங்களைத் தமிழ்ப் பாசுரங்களாக வெளியிட்டருளினாரோ.............

(இது ரஹஸ்யத்ரயஸாரத்தில் உதாஹரணமாக எடுக்கப்பட்ட பிரமாண வாக்யம்)

வார் ஸம்ஸாரிகளி லொருவராகச் சொல்லப்பட்டிருக்கிறார். இதற்குப் பிரமாணம் "மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து" என்பது தொடக்கமான திவ்ய ஸூக்திகளாம்.

புராணங்களில் அவதார விசேஷமாகச் சொல்லியிருப்பதைக் கொண்டு ஆழ்வாருடைய ஸூக்திகளை அபிநய பரங்களாகக்கொள்ளுவோமானால், தங்கள் தங்களுடைய ஸ்வரூப ஸ்வபாவ நிர்ணயத்தில் தங்கள் தங்களுடைய வாக்கியங்களே முக்கிய பிரமாணமாகையாலும், "பொய்யில்பாடல்" ஆயபிரமாண சிரேஷ்டமாயும், ஸ்வவசனமாயுமுள்ள பாசுரத்தை அநுஸரித்து புராணங்களே வைபவ பரங்களென்று கொள்ளவுங்கூடும்; ஆகையால் இரண்டு பிரமாணங்களுக்கும் விரோதமில்லாமல், நிரூபிக்கவேண்டும். அப்படி நிரூபிக்குங்கால், (அ) "பூர்வோத்பந்நேஷு பூதேஷு தேஷு தேஷு கலௌயுகே அநுப்ரவிச்யகுருதே" என்று வேதாந்தாசார்யர் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் அருளிச்செய்தபடி ஸம்ஸாரியான சேதன விசேஷத்தில் ஸர்வேசுவரனுடைய சக்தியாவேசமுண்டாயிருப்பதைக் கொண்டு பரசுராமாவதாரம்போலும் ஆவேசாவதாரமென்று சொல்லலாம்.

ஒரு சேதநவிசேஷத்தில் சக்த்யாவேச முண்டாவதற்கு ஹேது ஸர்வேசுவரனுடைய நிர்ஹேதுக் கடாக்ஷமென்று நிர்வகிக்கும்படியிருப்பதால்; ஸம்ஸாரிகளில் ஒருவரை ஈசுவரன் தன்னுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தால் "மயர்மற மதிநல மருளினன்" என்பதற்கும் விரோதமில்லை. ஆகவே (க) "ஸாக்ஷாந் நாராயணோ தேவ: க்ருத்வாமர்த்ய மயீம்தநும், மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாச் சாஸ்த்ரபாணிநா" என்கிற சுலோகத்தால் ஆசார்யனைப் பகவதவதாரமென்று சொல்லியிருப்பதும், பொருத்தமுடையதாம்.

(அ) (இ-ள்) கலியுகத்தில் முன்னே அவதரித்திருக்கிற பெரியோர்களிடத்தில், பின்பு ஈசுவரன் தான் ஆவேசித்துத் தன் விருப்பத்தை நிறைவேற்றுகிறான்.

(க) (இ-ள்) ஸாக்ஷாந் நாராயணன் தன்னுடைய கிருபையாலே ஆசார்யனாகிற மனுஷ்ய ரூபத்தை யெடுத்துக்கொண்டு ஸம்ஸாரமாகிற ஸமுத்ரத்தில் மூழ்கியிருக்கிறவர்களை ஸாஸ்திரமாகிற கையாலே கரையேற்றுகிறான்.

இதை அநுஸரித்தே ஸ்ரீ வசனபூஷண வ்யாக்யானத்தில் ஆயி என்கிற ஸ்வாமி "குருரேவ பரம்பிருஹ்ம" என்கிற சுலோகத்தில் குரு சப்தத்துக்கு அர்த்தம் விலக்ஷணஜீவ விசிஷ்ட பகவத்தத்வம் என்றும், அந்த குரு சப்தமான எழுவாய்க்கும் பிருஹ்ம என்கிற பயனிலைக்கும் ஒரு நிலையிருக்கை [ஸாமாநாதிகரண்யம்] கூடுமென்றும் நிர்வஹித்திருக்கிறார். ரஹஸ்யத்ரய வ்யாக்யானமான ஸாரஸ்வாதி நீயிலும், ஆழ்வார்கள் ஆவேசாவதாரமென்றும், பரசுராமாவதாரம் ஆவேசாவதாரமாயிருந்தபோதிலும், தசாவதாரத்துட் சேர்க்கப்பட்டிருப்பதுபோல் ஆழ்வார்களையும், அபிநவ தசாவதாரமென்று கொள்ளலாம்படி சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படியான பொருத்தங்களைக்கொண்டு "ஈடு" "ஆசார்ய ஹ்ருதயம்" திவ்ய ஸூக்திகள், புராணங்கள் இவைகளுக்கு விரோதமில்லையென்று கண்டுகொள்ளத்தக்கது.

(தொடரும்.)

உபயவேதாந்த வித்வான்,
சிங்கராசார்யர்,
காரப்பங்காடு.

ஸ்ரீ:

ஸ்யமந்தகமணி விருத்தாந்தம்.

நல்லொழுக்கமும், நல்லறிவும், நற்சிந்தையுமுடைய யதுகுலத்தில் தோன்றிய நிக்கினன் என்பவனுக்குப் பிரசேனனென்றும், சத்ராஜித்தென்றும், இரண்டு புதல்வர் தோன்றினர். அவ்விருபுதல்வரும், ஒருவரையொருவர் விட்டுப்பிரியாத நேயமிக்கவராயிருந்தனர். அவ் விருவருள் சத்ராஜித் தென்பவனுக்குச் சூரிய பகவான், நண்பராயிருந்தார். ஒருநாள் சத்திராஜித்து கடற்கரை மருங்கிருந்து மிக்க வனப்புடன் சூரியபாகவானை நோக்கித் துதி செய்தனர். சூரியபகவான் அவர் துதிக்கிரங்கி அவர் எதிரில் தோன்றினர். உடனே சத்திராஜித்து சூரியபகவானைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து நின்று அடியேன் தேவரீரை நீண்டகாலமாக பக்திகொண்டிருப்பதற்கும், இப்பொழுது என்னெதிரில் மிக்கத் தேஜோரூபமாய்த் தோன்றியிருப்பதற்குந் தகுதியான ஓர் பிரயோ

ஜனத்தை யானடைய வேண்டுமல்லவா? என்றனர். அப்பொழுது சூரியபகவான் தன் கழுத்தில் தரித்திருந்த ஸ்யமந்தகமணியைக் கழற்றிவைத்து சத்திராஜித்தை நோக்கி வேண்டிய வரத்தைக் கேட்பாயாக என்றார். இப்பொழுது சத்திராஜித்து இதோ விளங்குகிற ஸ்யமந்தகமணியைத் தந்தருளவேண்டுமென வேண்டினர். இரவிபகவான் உகப்போடு அம் மணியைக் கொடுத்துத் தன்னிருப்பிடஞ் சேர்ந்தனர்.

சத்திராஜித்து மிக்க மகிழ்ச்சியுடன் அம் மணியைத் தரித்துக் கொண்டு துவாரகாபுரியை நோக்கி வருகின்றகாலத்தில் அம் மணியைத் தரித்த மகிமையால் அவர் சூரியபகவானைப்போல் விளங்கினர். இங்ஙனம் விளங்கிய இவரைச்சேய்மையிற் கண்டவர்கள், மண்ணின் பாரம் நீக்குதற்கு அவதரித்தவனாகிய நம் கண்ணபிரானைத் தரிசிப்பதற்காகச் சூரியபகவான் வருகின்றாரென மதித்துக் கண்ணபிரானிடத்திற் சென்று அறிவித்தனர். அப்பொழுது கண்ணபிரான், வருகின்றவன் தினகரனல்லன்; நம் சத்திராஜித்தாம். அவன் சூரியனுடைய அநுக்கிரகத்தாற் பெற்ற ஸ்யமந்தக மணியைத் தரித்துக் கொண்டு வருகிறானாதலால்; அவ்வளவு விளக்கமுற்றவனாய் விளங்குகின்றான். இவ் வுண்மையை அணுகிச்சென்று பார்க்கக் கடவீர் என்றனர். அவர்கள் அங்ஙனமே சென்று பார்க்கையில், அப்பிரான் கூறியபடி சத்திராஜித்தாகக் கண்டார்கள். பின் சத்திராஜித்து துவாரகையை அடைந்து, அம் மணியைக் கழற்றித் தன் மாளிகையில் வைத்தனர். அம் மணியோ நாளொன்றுக்கு எட்டுப் பாரப்பொன்னை யுண்டாக்கும் பெற்றியது. அது இருக்குந் தேசத்தில் மழையின்மை, வியாதி, பாம்பு முதலிய கொடிய ஜந்துக்களால் நேரும் பயம், முதலியவை இல்லாதிருக்கும். அதைக் கல்வி கேள்விகளிற் சிறந்த நல்லொழுக்கம் வாய்ந்தவனே தரிக்கத்தக்கவனாவான். அவ்வாறில்லாதவன் தரித்தால் அவனுக்கு அது கேட்டை விளைவிக்கும். சத்திராஜித்து நல்லொழுக்கமுடையவராதலால் அவருக்கு அம்மணி நாடோறும் எட்டும்பாரப் பொன்னைக் கொடுத்துக் கொண்டிருந்தது. சத்திராஜித்து அப்பொன்னை வறியோர், நல்லோர், முதியோர்கட்கு வழங்கலாயினர்.

இவ்வாறிருக்கின்ற காலத்தில் கண்ணபிரான் இம்மணி நம் உக்கிரசேன மஹாராஜாவுக்கிருந்தால் நன்ருயிருக்கும். இதை அவர் பெறும்படி நாம் முயற்சி செய்வோமாகில் இக் குலத்தில் வேற்றுமை யுண்டாகுமென ஆலோசித்து வாளாவிருந்தனர்.

சத்திராஜித்து 'இம்மணி மிகவும் பெருமையுடையது; இதைக் கண்ணபிரான் கேட்பாராகில் நாம் அவருக்கு என்னதடை சொல்லப்போகிருேம். இதை இனி நாம் வைத்துப் பாதுகாப்பதரிது' என்று தன் தமையனுகிய பிரசேனனுக்குக் கொடுத்துவிட்டனர். பிரசேனனே நல்லொழுக்கமில்லாதவன். இவன் அம் மணியின் பெருமை யறியாதவனுய் அதைத் தரித்துக்கொண்டு குதிரையின் மீதேறி வேட்டையாடச் சென்றனன். அப்பொழுது காட்டில் ஒரு சிங்கம் கடுஞ்சினங்கொண்டு இவன்மீது பாய்ந்து குதிரையோடு இவனையுங் கொன்று அந்த மணியை வாயிற்கவ்விக்கொண்டு சென்றது. அஞ்ஞான்று கரடி ராஜனுகிய ஜாம்பவன் அச் சிங்கத்தைக் கொன்று அம் மணியைக் கைப்பற்றித் தன்னிருப்பிடம் வந்து அதைத் தன் புதல்வனுகிய சுகுமாரனுக்கு விளையாட்டுக் கருவியாகக் கொடுத்தான். இஃதிங்ஙனமிருக்கக் காட்டிற்கு வேட்டையாடச்சென்ற பிரசேனன் இன்னும் வரக்காணுமே கண்ணபிரான் இந்த மணியைத் தாம் பெறவேண்டுமென நாட்டம் வைத்திருந்தனர். அவர் செய்த சூழ்ச்சியால் ஏதோ ஒரு கார்யம் நடந்திருக்கவேண்டுமென யாதவர் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டனர். இதுவிஷயம் கண்ணபிரான் கேள்வியுற்று நாம் இந்த லோகாபவாதத்தினின்று விடுபடவேண்டுமென்று எல்லா யாதவர்களையுமழைத்துப் பிரசேனன் வேட்டையாடச் சென்றவன் இதுவரையும் வரவில்லை அவன் கெதி யாதாயிற்ருே நாம் ஆராயாதிருப்பது தக்கதன்றே அவனைத் தேடிப்பார்ப்போம் வாருங்களென்று கூட்டிக்கொண்டு காட்டிடமெங்குந்தேடி ஓரிடத்திற் பிரசேனனும், அவன் குதிரையும், உயிர்மாய்ந்து கிடந்தன. அவற்றைக் கண்டனர். அவ்விடத்தில், சிங்கத்தின் அடிகளையும், அது தாக்கியதையும், நகக்குறிகளையும், அப் பிரசேனன் மீதிருக்க எல்லா யாதவர்களும் கண்கூடாகக் கண்டதினுல், கண்ணபிரான் தமக்குண்டாகிய அபவாதத்தினின்று விடுபட்டனர்.

பின்னர் சிங்கம் சென்ற வழியைத் துருவிச் சென்றனர். ஓரிடத்தில் அச் சிங்கம் கரடியாற் கொல்லப்பட்டிருப்பதையுங் கண்டனர். அம் மணியின் அருமையை நினைத்துக் கரடிசென்ற வழியையும் ஆராயவேண்டுமென்று, யாதவச் சேனைகளை அங்குள்ள ஓர் மலைச்சாரலில் நிறுத்திவிட்டுக் கண்ணன் தாம் ஒருவராய்க் கரடியின் குகைக்குட் பிரவேசித்தனர். அங்குச் சாம்பவனது குமாரனாகிய சுகுமாரன் செவிலித்தாய் அவனை ஓர் தொட்டிலிலிட்டு ஆட்டிக்கொண்டிருந்தனள். அக்குழந்தை அழத்தொடங்கியது. அப்பொழுது குழந்தாய்! பிரசேனன் பெற்ற அருமையான மணியைத் தானடையக் கருதிய சிங்கம் அவனைக்கொன்று பெற்றது. அச் சிங்கத்தை உன் தந்தை கொன்று அம் மணியை உனக்கு விளையாட்டுக் கருவியாகக் கொடுத்திருக்கிறார். இனி உனக்கு என்ன குறையுண்டு. அழாதே மகனே! அழாதே மகனே! என்று தாலாட்டிக்கொண்டிருப்பதையுங் கண்டார். அப்பொழுது அச் செவிலித்தாய் மணியையுற்றுப்பார்த்துக்கொண்டிருந்த கிருஷ்ணனைக் கண்டு நடுநடுங்கி என்னைக் காக்கவேண்டுமெனக் கூக்குரலிட்டாள். அக் கூக்குரலைக்கேட்ட ஜாம்பவான் கோபாவேசத்துடன் வந்து கண்ணபிரானோடு யுத்தஞ் செய்தனன். அந்த யுத்தமும் இருவர்க்கும் இருபத்தொருநாள்வரை நடைபெற்றது. அங்ஙனம் நடைபெற்றும், வெற்றி தோல்வி ஒருதலையாய் முடிவுபெற்றதில்லை. இஃதிவ்வாறாக; மலைச்சாரலில் இருந்த யாதவச்சேனைகள் ஏழுநாள்வரை கண்ணன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தும், வராமையால் கண்ணன் பகையை வெல்லுவதில் மிக்க வாற்றலுடையவராதலால் பகைவரால் அவருக்கோரிடையூறு நேர்ந்திருக்காதேனும் கரடியின் குகையில் ஏதாவது ஓரிடையூறு நேர்ந்து அதனால் உயிர் நீத்திருப்பாரெனத் தீர்மானித்துத் துவாரகாபுரியை அடைந்து கண்ணபிரான் உயிர் நீத்துவிட்டாரெனக் கூறினர். அதுகேட்ட யாதவரெல்லாம் நமக் கருந்துணைவராயிருந்த கண்ணபிரான் முடிந்தனரே இனி நாம் என் செய்வோமென மனம் நொந்து வாய்விட்டலற்றினர். பின்னர் ஒருவகையில் தேறிக் கண்ணனுக்குச் செய்ய வேண்டிய அந்திமக்கிரியைகளைக் குறைவறச் செய்து முடித்தனர்.

அவர்கள் மிகவும் சிரத்தையோடு செய்த சிரார்த்தத்தின் பலத்தால் ஜாம்பவானோடு யுத்தஞ் செய்துகொண்டிருந்த கண்ணபிரானுக்கு மனக்களிப்பும், தேகவலிமையும், உண்டாயின. ஜாம்ப

வானுக்குத் தேகத்தளர்ச்சியும், மனக்கலக்கமுமுண்டாகிப் போர் செய்தற்காற்ருது கண்ணபிரான் திருவடிகளில் நமஸ்கரித்து நின்று 'துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனர்த்தமாக அவதரித்த எமது தலைவனுகிய இராமபிரானே இப்பொழுது இவ்வுருவோடுங் காணப் படுகிறீரென்று பலவாருக ஸ்தோத்ரஞ் செய்தான். கண்ணபிரான் இரக்கங்கொண்டு ஜாம்பவானைத் தமது கைகளாலணைத்துக் கொண்டு நடந்த பெரும்போரால் மிகவும் நொந்தனையென அருள் புரிந்தார்.

பின் ஜாம்பவான் கண்ணபிரானை நோக்கித் தேவரீரை இன்னுரென்றறியாமல் போர்செய்த கொடுஞ்செயலை க்ஷமித்தருள்வதோடு அடியேனுடைய புதல்வியாகிய ஜாம்பவதியையும் தேவரீர் மனைவியாக அங்கீகரிக்க வேண்டுமெனத் தன் புத்திரியையும், ஸ்யமந்தக மணியையுங் கொடுத்து நமஸ்கரித்து நின்ருன். கண்ணபிரான் ஜாம்பவானுடைய வேண்டுகோளிற்கிணங்கி, ஜாம்பவதியையும் மனைவியாகக்கொண்டு ஸ்யமந்தகமணியையும் பெற்று ஜாம்பவானுக்கு ஆசிமொழி கூறித் துவாரகாபுரியை நோக்கி எழுந்தருளினுர். அப்பொழுது துவாரகாபுரியிலுள்ளாரனைவரும் மனக்களிப்புடன் ஆநந்தக்கண்ணீர் பொழிய வணங்கி நின்று போனபொருளைப் பெற்ருேமென ஆரவாரித்தார்கள். இஃதோர் நல்லநாளென விழாவுங் கொண்டாடினுர்கள்.

கண்ணபிரான், ஜாம்பவானுடைய பிலத்தில் நடந்த வரலாற்றை ஸவிஸ்தாரமாக யாதவக் குழாங்களுக்கு எடுத்தோதி ஸ்யமந்தகமணியைச் சத்திராஜித்திற்களித்து ஜாம்பவதியை அந்தப்புரத்திற் கழைத்துச்சென்று சுகமாக எழுந்தருளியிருந்தார்.

(தொடரும்.)

வேதாந்த தத்வவிளக்க வினுவிடை.

(67-ம் பக்கத் தொடர்ச்சி.)

வினு:- இந்த வேதத்தைக்காட்டிலும் மேலான சாஸ்திரங்கள் இல்லையோ?

விடை:-இந்த வேதத்தின் மிக்கதோர் சாஸ்திரமில்லாமையாலன்றோ (க) "ஸத்யம்ஸத்யம்புநஸ்ஸத்யம் உத்ருத்யபுஜமுச்யதே, வேதசாஸ்த்ராத் பரம்நாஸ்தி..........." என்று ஐதிஹாஸிகர்களாலும், பௌராணிகர்களாலும், சொல்லப்பட்டது.

வினா:- வேதத்தினுடைய நித்யத்வ (எப்பொழுதும் உள்ளதாயிருக்கை) அபௌருஷேயத்வங் [ஒருபுருஷனாற் செய்யப்படாதிருக்கை]களைச் சொல்லுகிற ப்ரமாணங்கள் எவை?

விடை:-(உ) "வாசாவிருப நித்யயா" என்கிற சுருதியாலும், (ங) "அநாதிநிதநாஹ்யேஷா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயம்புவா, ஆதௌ வேதமயீ திவ்யா யதஸ்ஸர்வா: ப்ரஸூதய:" என்கிற ஸ்மிருதியாலும், வேதத்தினுடைய நித்யத்வ அபௌருஷேயத்வாதிகள் ப்ரதிபாதிக்கப் படுகின்றன.

வினா:- ஆனால் வேதங்களைச் சிலர் சிலருக்குச் சொன்னதாகக் காணப்படுகிறதினால் அவை ஓர் காலத்தில் தோன்றியவையாயும், புருஷனாற் செய்யப்பட்டவையாயும், இருத்தல் வேண்டும்; அங்ஙனமிருக்க அவை அபௌருஷேயத்வ, நித்யத்வ முடையனவென்பது எவ்வாறு பொருந்தும்?

விடை:-"தர்சநாத் த்ருஷ்டி:" என்று வேதாதிகளின் பூர்வஸித்த ஆநுபூர்வியைத் தரிசித்துச் சொன்னவர்களென்பதும், பூர்வஸித்த அநுஷ்டேயார்த்த ப்ரகாசகங்களான மந்த்ர பாகங்களை ஸாக்ஷாத்கரித்துச் சொன்னவர்களென்பதும் தோற்ற (ச) "நமருஷிப்யோ மந்த்ர க்ருத்ப்யோ" என்றும் "பகவாந் சௌநகமுநி:" என்றும் வேதத்திற் சொல்

(க) இச்சுலோகம் வேதவியாஸ பகவானாற் சொல்லப்பட்டது.

இ-ள். வேதத்தின் மிக்கதோர் சாஸ்திரமில்லையென்று தன் புஜத்தைத் தூக்கிக்கொண்டு மும்முறை ஸத்யஞ் செய்தார்.

(உ) இ-ள். விருப-அழகுள்ளவனே! நித்யயா-எப்பொழுதுமுள்ள வாசா-வாக்கினால் (வேதவாக்கினால் ஈசுவரனை யறியலாம்-)

(ங) இ-ள். எந்த வாக்கினால் சகல ஜகத் சிருஷ்டிகளும் அறியப்படுகிறதோ? அவ்வாக்கு உத்பத்தி விநாசங்களற்றதாயும், மற்ற பிரமாணங்களினுஞ் சிறந்ததாயும், வேதஸ்வரூபமாயும் இருக்கின்றது; இவ்வாக்கு சிருஷ்டிகாலத்தில் ஸ்வயம்புவான ஸர்வேசுவரனால் வெளியிடப்பட்டது.

(ச) இ-ள். வேதமந்த்ரங்களை வெளியிட்டவர்களாகிய ருஷிகளின் பொருட்டு நமஸ்காரம்.

லப்பட்டிருக்கிறது. மேலும் "ஸூர்யா சந்த்ரமஸௌ தாதா யதாபூர்வம் அகல்பயத்" என்றுஞ் சொல்லுகிறபடியே சந்திர ஸூர்யர்களைப் பூர்வத்தின்படி உண்டாக்குவதுபோல் முதலிலே அத்யயநம்பண்ணுகிறவர்களை உண்டாக்கி அத்யயநம்பண்ணும்படி செய்து ப்ரவசனம் பண்ணுகிறவர்களையும், கேட்கிறவர்களையும் உண்டாக்கினபடியால் "ஆதர்வணம்" "தைத்திரீயம்" "காண்வம்" என்று அத்யயநஞ் செய்தவர்கள் பெயரால் பெயர்பெற்றது. ஒரு கல்பத்தில் ஸூர்ய சந்திராதியருடைய ஆதிபத்யம் வஹித்தவர்களே மறு கல்பத்தில் இருப்பதில்லை. அந்தப் பதவிகளை வேறு ஆத்மாக்கள் கைக்கொள்ளுகின்றன., அவ்வாறு கைக்கொண்டாலும், அவைகட்குப் பெயர், உருவம், செய்கைகள், ஒரேவிதமாய் அமைகின்றனபோல கல்பாதியிலே வேதங்களின் பூர்வவித்தாநுபூர்வியை அத்யயநம் பண்ணினவர்களும், கேட்கிறவர்களும், வேறாயிருந்தபோதிலும், அவர்களுடைய பெயர் உருவம், தொழில்கள், ஒரேவிதமா யிருக்குமென் றறியவேண்டும்.

வினா:- வேதம் எத்தனை பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது?

விடை:- அது பூர்வபாகமென்றும், உத்தரபாகமென்றும், இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

வினா:- பூர்வபாகத்திற் சொல்லப்பட்டிருக்கும் விஷயம் என்ன?

விடை:- அக்னீந்த்ராதி தேவதாந்தர்யாமியினுடைய ஆராதன ரூபமான கர்ம ஸ்வரூப ததங்கோபாங்கங்களும், ஐசுவர்யாதி ஐஹிக புருஷார்த்தங்களும், ஸ்வர்க்காதி ஆமுஷ்மிக புருஷார்த்தங்களும், தத்ஸாதநங்களுமாம்.

வினா:- உத்தரபாகத்திற் சொல்லப்பட்டிருக்கும் விஷயம் என்ன?

விடை:- ப்ருஹ்மத்தினுடைய ஸ்வரூப ரூப குண விபூதி சேஷ்டிதங்களும், ஆத்மாக்களின் ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களுமாம்.

வினா:- பிர்ம்மா முதலானவர்கள், உயரிய புருஷார்த்தங்களையும், தாழ்ந்த புருஷார்த்தங்களையுங் கூறியதினால் அவர்கள் முக்குணவயமுடையவரெனக் கொள்வதுபோல வேதமும்

பரம புருஷார்த்தங்களையுங் கூறி இதர புருஷார்த்தங்களையும் கூறியதினால் அதுவும் குணத்திரயமுடையதெனக் கொள்ளவேண்டுமன்றோ?

விடை:-வேதம்ஸவிபூதிகனான பரமாத்மாவை யுணர்த்தவந்தது. பரமாத்மாவை யுணர்த்துமிடத்து விபூதியை விசேஷணமாகவுடையவனென உணர்த்தவேண்டும்; விபூதியோ சேதனசேதன ஸ்வரூபமாயுள்ளது; அசேதனம் அறிவற்றதாதலால் அதை யொழித்து முக்குணமுடைய ஆத்மாக்களைக் குறித்து அவைகளின் குணாநுகுணமாகப் பல சாதனங்களைச் சொல்லியது. இதை வலியுறுத்தவே "த்ரைகுண்யவிஷயாவேதா" என்று சொல்லப்பட்டது; ஆதலால் வேதம் குணத்திரயமுடையதெனக் கொள்ளலாகாது.

வினா:- மோக்ஷாபேக்ஷயுடைய முமுக்ஷுக்கள் வேதத்தில் க்ரஹிக்கவேண்டிய அம்சம் எவ்வளவு?

விடை:-"யாவாநர்த்த உதபாநே ஸர்வதஸ்ஸம்ப்லுதோதகே, தாவாந் ஸர்வேஷு வேதேஷு பிராமணஸ்ய விஜாநத:" என்று அருளிச்செய்தபடி தாபார்த்தனானவன் ஆறுபெருகி ஓடாநின்றால், தன்னுடைய விடாய் தீருகைக்கு வேண்டிய தீர்த்தத்தை க்ருஹிக்குமாப்போல மோக்ஷாபேக்ஷயுடையவர்கள் வேண்டுமளவே க்ரஹிக்க வேண்டும்.

(தொடரும்.)

தீண்டாமை.

தேச நன்மையை நாடும் நேசமிக்க பொது ஜனத்தலைவர்களாகிய மேதாவியர் பலர் தீண்டாமையைக் கைக்கொள்வதால் பல கெடுதிகள் நேருகின்றனவென அபிப்பிராயங்கொண்டு அதைப் பிரஸங்க வாயிலாகவும், உபந்யாஸ வாயிலாகவும் வெளியிடுகின்றனர். ஈண்டு அவர்களது அபிப்பிராயத்தை ஆராயவேண்டியது. எல்லோருக்கும் உரிய கடமையாம். தீண்டாமை என்பதன் இயல்பு என்ன? அது நன்மையைப் பயப்பதா? அல்லது தீமையைப் பயப்பதா? அதை இதுகாறுங் கைக்கொண் டொழுகிவந்த காரணமென்ன? இப்போது வேண்டாமென்று விலக்குதற்குக் காரண

மென்ன? என்பது முதலியவற்றையும் ஆராய்ந்துகொண்டு பின் இதன் முடிவு காணுதல் சால நன்றுமாதலால் முன்னர் இவற்றை ஆராய்வோம்.

தீண்டாமை என்பதற்குத் தொடுதலின்மை என்பதே பொருளாம்; ஆயினும் அதைக் கிட்டுதலின்மை என்னும் பொருளினும் வழங்குகின்றனர். இவ் விருவகைத் தீண்டாமையும் லௌகிகம், வைதிகமென இரண்டு வகைப்படும். அவற்றுள் லௌகிகத் தீண்டாமையாவது-தொத்து நோயாளர், நெருப்பு, விஷஜந்துக்கள் முதலியவற்றைப் பிறர் விலகிநிற்றலாம். இத் தீண்டாமையை மேற்கொள்வதால், முறையே நோய்வாய்ப்படுதல் முதலிய தீங்குகளினின்றும் தப்புகிறோம். இதனையறியாத மானிட சனங்கள் இத் தீண்டாமையைக் கடைப்பிடித் தொழுகமாட்டாது தீண்டுதலை மேற்கொண்டு நோய்வாய்ப்பட்டு மாண்டுவிடாமல் காப்பாற்ற வேண்டி, இராஜ ஆஜ்ஞையால் இத் தீண்டாமை பாதுகாக்கப்பட்டிருப்பதால், நன்மை உண்டாகக் காண்கிறோம். இராஜ ஆஜ்ஞையாற் பாதுகாக்கப்படாதிருக்குமாகில் மகாமாரி முதலிய தொத்து வியாதிகளால் எத்தனைகோடி ஜனங்கள் இதுவரை அழிந்திருக்க வேண்டும். அவ்வளவா யழியாது பாதுகாத்துக் கொண்டிருப்பது இராஜ ஆஜ்ஞையேயாம்.

இனி, இரண்டாவதாகச் சொல்லிய ஈசுவராஜ்ஞையாற் பாதுகாக்கப்பட்டுவரும் வைதிகத் தீண்டாமையாவது—இம்மையில் பயன் அறிய முடியாததாய், அதிருஷ்டரூபமாயிருப்ப தொன்றும். இத் தீண்டாமைக் கிலக்காயுள்ளதொன்றின் பண்புக்கு அபரிஸுத்தி யென்றும், வாலாமை யென்றும் பெயராம். அது சாத்தீட்டு, சூதகத்தீட்டு, முட்டுத்தீட்டு முதலியவாகப் பல வகைப்படும். இத் தீண்டாமைக்கு மறுதலையான தீண்டுதற்குரிய பொருளின் பண்புக்குத் தூய்மை என்றும், பரிஸுத்தி யென்றும், பெயர் வழங்குவர். ஆதலால் பரிஸுத்தியுடைய பொருள்களைப் பரிஸுத்தியுடையார் தீண்டலாம். பரிஸுத்தியில்லாதவர்கள் தீண்டலாகாது. ஆகவே தோல், எலும்பு, பிணம் முதலியனவும், பரிஸுத்தியுடையோரால் தீண்டாமைக் கிலக்காகக் கொள்ளப்படுகின்றன. இவற்றைத் தீண்டுதலால், இவற்றிற்கு நன்மையேனும் தீங்கேனும், இல்லையென்பது பிரசித்தம். இவற்றைத் தீண்டாதார்க்கு நன்மையேனும் தீண்டினார்க்குத் தீமையேனும் கண்கூ

டான காக்ஷிக்கு விஷயமன்று; ஆனால், அறநெறி ஒழுக்கமுடையார் ஈசுவராஜ்ஞா ரூபமான அறநூலுரைகளைக் கைக்கொண்டு இவற்றைத் தீண்டாது விலக்கியிருக்கின்றார்களென்றே கொள்ள வேண்டும். வேறு காரணம்பற்றி விலக்கினார்களென்று கொள்வதற்கு இடமில்லை.

மேற்கூறப்பட்ட தோல், எலும்பு முதலியவற்றை மாம்ச பிண்ட ஸம்பந்தம்பற்றித் தீண்டலாகாதென்று விலக்கினார்களோ வென்று கொள்வோமாகில் கிருஷ்ணாஜினம் (மான்றோல்) முதலிய தோல்களும், சங்கு, சிருங்கம், முதலிய என்பு வகைகளும், தீண்டப்படாதென்று விலக்கப்பட்டிருக்கவேண்டும்; அவை விலக்கப் படாமல் மான்றோல் முதலியவற்றை ஆசாரத்தோடு செய்யவேண்டிய மந்த்ர ஜபயோகத்தியான காலங்களில் ஆசார சீலரான வைதிகோத்தமரும், ஆசனமாக உபயோகப்படுத்துவதால், தீண்டாமையுடையதன்றென்றும், பரிஸுத்தமுடையதென்றும், ஏற்படுகிறது. சங்கும், கோடும், தேவபூஜா காலததில் தேவாபிஷேக யோக்யமாயுள்ள தீர்த்தபாத்திரமாக வழங்கப்படுகிறபடியால் மாம்ச ஸம்பந்தம்பற்றித் தீண்டாமையுடைய தென்பதற்கு இடமில்லை. வேறு எந்தப் பிரகாரத்தாலும், நம்மாலறியமுடியாத வேறொரு காரணத்தால் அவை தூய்மையுடையனவாயிருக்க வேண்டுமென்றறிகிறோம் இவ்வாறே சாக்காட்டால் வரும் தீண்டாமையும், ஏழு தலைமுறையளவுள்ள ஆண்மக்களைப் பற்றிவருவதும், பெண்மக்களைப் பற்றாதிருப்பதுங்கொண்டு ஆராய்வோமானால் சாஸ்திர நம்பிக்கையைக் கொண்டு அநுஷ்டித்து வருகிற தருமாசரணமாயிருக்கிறதே யல்லது, வேறுகாரணம் சொல்லுதற்கில்லையாம் தருமம் திருஷ்டபலமுடையதன்றாம். அது அதிருஷ்ட ரூபமாயுள்ளது.

இந்தத் தீண்டாமையால் பரஸ்பரம் விலக்கப்படுமவருக்கும் விலகி நிற்பவருக்கும் சிறிது கஷ்டநஷ்டங்க ளுண்டாகலாம். ஆனாலும், அவ் விருதிறத்தாரும் அத் தீண்டாமை தருமாநுஷ்டானமென்பது பற்றி அதனாலுண்டாகும் கஷ்ட நஷ்டங்களைச் சகித்துக்கொள்ளுகிறார்கள். இறந்தவனுக்கு ஜ்ஞாதியாயுள்ளவரெல்லாம் குறிப்பித்தகாலம் வரை பிறர்களால் தீண்டத் தகாதவராகின்றார்கள். ஆலய வழிபாடு, பந்திபோஜனம் முதலியவற்றில்நின்றும் விலக்கப்படுகிறார்கள். அவர்கள் அங்ஙனம் விலக்கப்பட்டிருப்ப

தைத் தருமாநுஷ்டானமான சதாசாரமென்றே விருப்போடு ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

இனி மகளிர்க்கு முட்டு விலக்கைப்பற்றி ஆராய்வோம். முட்டு விலக்குடையோர் மூன்றுநாளும் வீட்டிற்குள் நுழையாமல் விலக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு விலக்கப்பட்டிருப்பதாலாகிய கஷ்ட நஷ்டங்களை, விலக்கப்பட்டவரும், விலகியவரும். தருமாசரணத்தின் பொருட்டு ஸஹித்துக் கொள்ளுகிறார்கள். இங்கு விலக்கப்பட்டவருக்கும், விலகியவருக்குமுள்ள கஷ்ட நஷ்டங்களை ஆராய்வோமானால் விலக்கப்பட்டவள் கணவன், மாமன் மாமி முதலியோர்க்குச் சோறு படைத்தற்கும், குற்றேவல் புரிதற்கும், தெய்வ வழிபாடு முதலிய செய்வதற்கும் கூடாதவளாய் விட அதனால் விலகிய கணவன் முதலியோர் கஷ்டமடைகிறார்கள். விலக்கப்பட்டவளும், வீட்டிற்குள் நுழைந்து தனக்கு வேண்டியவற்றைச் செய்துகொள்ள முடியாமல் பராபேக்ஷையால் கஷ்டமடைகிறாள். இவ்வாறே சாத்தீண்டாமை சூதகத்தீண்டாமைகளாலும், ஒவ்வொரு வீட்டிலும், விலக்கப்படுபவரும், விலகியிருப்பவருமாகிய இருமருங்கினரும் திருஷ்டபல மொன்றுமின்றி அதிருஷ்டபல மொன்றையே நோக்கித் தருமாசாரணமாகத் தீண்டாமையை அநுஷ்டித்து வருகிறார்கள். இத் தீண்டாமையால் விலகியிருப்பது பற்றி அவர் தமக்கு இழிவு வந்ததாகக் கருதுவதுமில்லை.

இன்னும் இத் தீண்டாமையைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும், அங்கீகரித்து ஒருதாரணத்தால் காட்டியிருக்கிறார். அது வருமாறு.

> "தலையினிழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையினிழிந்தக் கடை"

என்றதனால் மானமுடையவன் தன்னிலையில் நிற்புழிப் பேணப்படுதற்கும், தன்னிலையினிழிந்த விடத்து இழிக்கப்படுதற்கும், தலைமயிரை உவமையாகக் கூறியிருக்கின்றார். ஈண்டுத் தலைமயிர் பேணப்படுதலையும், இழிக்கப்படுதலையும் ஆராய்வோம்

இங்குப் பேணப்படுதற்குரிய தலைமயிர் என்றது அக்ரவர்ணர்கட்கு யஜ்ஞோபவீதம்போல் பாவனமுடையதாய், சௌளகருமத்தால் வேதமந்த்ர ஸம்ஸ்காரமுடையதாய், பகவத் பிரஸாதமான பூமாலை முதலிய சூட்டப்பெறுவதாய், தேவோபாஸகர் அங்கந்

யாஸ காலத்தில் கையால் தொட்டு அபிமந்திரிக்கப்படுவதாய் ஸ்நான தீர்த்தத்தால் பிதுருக்கள் திருப்தியடைய நீர்வடிக்கப்படுவதாயிருக்கும் உச்ச ஸ்தானத்தையுடைய சிகையென்னும் சீவிச்சிக்கெடுத்து முடித்துப் பேணப்படும் தலைமயிராம். அது தானே தலையிலிருந்து கழிந்தவிடத்தும், க்ஷௌரத்தால் கழிந்தவிடத்தும் ப்ரத்யக்ஷமான தோஷம் ஒன்றுமில்லாதிருக்க அதைக் காலாலும் தீண்டக்கூடாதென்றும், தீண்டில் ஸ்நானஞ்செய்து புனிதராக வேண்டுமென்றும், அசுசியினுகாது விலக்கவேண்டுமென்றும் இழிக்கப்பட்டிருக்கிறது. நிலையினிழிந்தோரை இழிக்குமுகத்தால் தீண்டாமையை அங்கீகரித்திருக்கிறார்.

(தொடரும்)

ப, — அ.

தர்மம்.

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரன் சேதனர்கள் க்ருதயாக்ருத்யங்களை அறிந்து உஜ்ஜீவிக்குமாறு வேதாதி சாஸ்த்ரங்களை வெளியிட்டருளினான். அந்த சாஸ்த்ரங்களின் ப்ரயோஜனம்; உலகத்தில் மக்களாய்த் தோன்றினவர்கள் அவரவர் தகுதிக்கேற்றவாறு புருஷார்த்தங்களைப் பெற்று வாழுதலேயாம். பெறுதற்கரிய மானிடப் பிறப்புடையவர்களால் விரும்பி அடையக்கடவனவாயுள்ள சிறந்த பொருள்களே புருஷார்த்தமெனப்படும். அவற்றைத் தமிழர் உறுதிப்பொருள் என்று வழங்குவர். உறுதல்—அடைதல்; உறுதி—அடைதற்குரியது. அது ப்ராப்யம் என்பதன் பர்யாயமாகும்.

அப் புருஷார்த்தம் நான்கு வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பன. அவற்றை முறையே அறம், பொருள், இன்பம், வீடு என்றும் சொல்வதுண்டு.

அவைகளுள் முதன்மையான தர்மமே இங்கு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. நான்கு வகைப்பட்ட புருஷார்த்தங்களையும் ப்ரதிபாதிக்கின்ற சாஸ்த்ரங்கள் க்ருத்யங்களைச் செய்ய வேண்டுமென்று விதிப்பனவாயும், அக்ருத்யங்களைச் செய்யலாகாதென்று விலக்குவனவாயும் உள்ளன. அவை இரண்டும் தனித்தனியே விதியென்றும் நிஷேதம் என்றும் வ்யவகரித்தற்குரியன.

நிஷேதம்-விலக்கு.

அவ் விதிநிஷேதங்களை அறிந்து அவற்றிற்கு இணங்கி நடத்தலே தர்மம் என்று சொல்லப்படுகிறது. அதனை, பரிமேலழகர் என்னும் தமிழாசிரியர், 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' என்று கூறியதனு லறியலாம். இவ்வாறு விதி நிஷேதங்களால் வரையறுத்துக்கொள்ளப்பட்டமைபற்றியே, தர்மத்திற்கு அறம் என்று தமிழில் பெயர் வழங்குவதாயிற்று என்பது இங்கே அறியத்தக்கது. அறம்-அறுக்கப்பட்டது. ஆகவே தர்மம் என்பதற்கு வரையறுத்து நியமிக்கப்பட்ட ஒழுக்கம் என்பதே பொருளாதல் தெளிவாகின்றது. ஒழுக்கம் எனினும் ஆசாரம் எனினும் ஒக்கும். இனி அதர்மமாவது விதித்தவற்றைச் செய்யாமையும் விலக்கியவற்றைச் செய்தலுமாம் இது தர்மத்திற்கு எதிரிடை. இதனைத் தமிழர் மறம் என்று வழங்குவர். மறுக்கப்பட்ட ஒழுக்கம் என்பது அதன் பொருள். அறம் புண்ணியத்திற்குக் காரணமாயுள்ளது; மறம் பாபத்திற்குக் காரணமாயுள்ளது.

அவ்வாறாயின், ஒழுகுதல் செய்தலாதலால் விதித்தன செய்தல் என்பது ஒழுக்கமாகத் தட்டில்லை; ஆனாலும் விலக்கியன ஒழிதல் என்பது நிஷேதித்தவற்றைச் செய்யாமலிருத்தலாதலால், செய்யாதிருத்தல் ஒழுகுதலாகாதே எனின்; அது பொருந்தாது. விதித்தன செய்தலைப்போலவே விலக்கியன ஒழிதலும் ப்ரயத்னஸித்தமாயிருக்கிறது. உதாரணமாக சாஸ்த்ரங்கள் வ்ரததினங்களில் உண்ணலாகாதென்றும், உறங்கலாகாதென்றும், எக்காலத்தும் ஜீவஹிம்ஸை கூடாதென்றும் நிஷேதிப்பதை எடுத்துக்கொள்வோம். ஒவ்வொருவருடைய மனதும் பூர்வ வாஸனையினால் உண்ணுதலும் உறங்குதலும், ஜீவஹிம்ஸையும் முதலான காரியங்களில் ப்ரவர்த்திப்பதே ஸ்வபாவமாகவுடையது. அத்தன்மையால் அது ஒரு சுழலுகின்ற சக்கரத்தை ஒக்கும் என்னலாம். எவ்வாறு அச் சக்கரத்தின் சுழற்சி மனிதனுடைய முயற்சியினால் தடைசெய்து நிறுத்தப்படுகிறதோ அவ்வாறே சாஸ்த்ரங்களை உணர்ந்தவன், நிஷேதித்த வழிகளில் தன் மனதைச் செல்லவிடாமல் நிக்ரஹித்து, உபவாஸம், கண்விழிப்பு, அஹிம்ஸை முதலானவற்றை அனுஷ்டிக்கிறான். ஆதலால் விதித்தன செய்தலைப் போலவே விலக்கியவற்றைச் செய்யாது விடுதலும் ஒழுக்கம் என்றே சொல்லத்தக்கது. இது நிற்க;

இவ் விதிநிஷேதங்கள் மனுஷ்ய ஜன்மத்திலுள்ளவர்களா லேயே அறிந்து ஒழுகுதற்குரியனவா யிருத்தலால், அறம் முத லிய நான்கு புருஷார்த்தங்களும் அவர்களுக்கே உரியனவாம். ஏனைய விலங்குகட்கு அவை ஆகா. ஏனெனில் ம்ருகங்கள் விதி விலக்குகளுக்குக் கட்டுப்பட்டன அல்ல.

அவ்வாறே அவ் விலங்குகளைப்போல விதிவிலக்குகளுக்கு உட்பட்டு ஒழுகாத மக்களுக்கும் தர்மம் முதலான புருஷார்த்தங் கள் வித்திப்பதில்லை. ஆஹாரமும், நித்ரையும், ப்ராண பயமும், மைதுனமும், ஜனனமும், மரணமும் ஆகியவற்றால் மனுஷ்யர் களுக்கும் விலங்குகட்கும் வித்தியாஸமில்லை. அஃதாவது, மனி தர்கள் உணவை உட்கொள்ளுகிறார்கள், அவ்வாறே ம்ருகங்களும் உட்கொள்ளுகின்றன; மனிதர்கள் நித்ரை செய்கிறார்கள், ம்ருகங் களும் கண்ணுறங்குகின்றன; மனிதர்கள் உயிரச்சமுடையவர்களா யிருக்கிறார்கள்; ம்ருகங்களும் அவ்வாறே உள்ளன; மனிதர்கள் புணர்ச்சியை விழைகிறார்கள்; ம்ருகங்களும் அங்ஙனமே விரும்பு கின்றன; மனிதர்கள் பிறப்பும் இறப்பும் உள்ளவர்களாயிருக்கின் றனர்; ம்ருகங்களும் அவ்வாறே உள்ளன; ஆதலால் இரண்டும் ஒக் கும் என்பதாம். ஆயினும் ம்ருகங்களினின்றும் மக்கள் வேறு பட்டிருப்பதற்குக் காரணம், அவர்கள் விதி நிஷேதங்களுக்கு அடங்கி நடக்கும் ஆசாரமுடைமையேயாம். ஆகவே அறமுடை மையும் அஃதில்லாமையுமே இரண்டிடத்துமுள்ள வித்தியாசமென் பது அறியத்தக்கது.

"தக்கஇன்ன தகாதன இன்ன என்(று)
ஒக்கஉன்னலர் ஆயின்உயர்ந்துள
மக்களும்விலங்கேமனுவின்நெறி
புக்கவேல்அவ்விலங்கும்புத்தேளிரே"

சக்ரவர்த்தித் திருமகன் வாலியை வதைத்து வீழ்த்திய பொழுது, அவ் வாலி தான் விலங்கினத்திற்குரியவனாதலால் தீ யொழுக்கத்தால் ஆகிய தோஷம் தன்னைச் சாராதென்றும், அத னால் ஸ்ரீராகவன் தன்னைக்கொன்றது அநீதியென்றும் முறையிட் டான்; அந்த ஸந்தர்ப்பத்தில் பெருமான் அவனுக்கு ஸமாதான முண்டாகும்படி உரைத்த வார்த்தைகள் இவை. இதுதக்கது,இது தகாதது என்பதைச் சாஸ்த்ரங்களின் விதி நிஷேதங்களாலறிந்து

அதன்படி அனுஷ்டியாதவர்கள் மக்களாயிருப்பினும் விலங்காகவே எண்ணப்படுவர்; விலங்கேயாயினும் அவற்றை அறியும் விசேஷ ஜ்ஞானமுடையனவாயின் தேவரோடொக்க நன்கு மதிக்கத்தகும் என்பது அதன்பொருள். ஆதலால் இதுவரை சொல்லிய விஷயங்களால் ஸதாசாரமில்லாத மனுஷ்யர்கள் தர்மம் முதலான புருஷார்த்தங்களை அடைவதற்கு யோக்யர்கள் அல்லர் என்பது விளங்கும்.

இனி, விதி நிஷேதங்களை அறிந்து நடவாத மனிதர்கள் தர்மம் ஒன்றையே இழப்பர் என்று சொல்லுவதல்லாமல், அவர்கள் தர்மம் முதலிய நான்கு புருஷார்த்தங்களையும் அடையமாட்டார்கள் என்பது எங்ஙனேயென்னில்:- அர்த்தமும், காமமும், மோக்ஷமும் ஆகிய உறுதிப்பொருள்கள் மூன்றும் அறத்தைப்பற்றியே நிலைபெறுகின்றன; ஆதலால் தர்மத்தை இழந்த அவர்கள் அதனோடு தொடர்புடைய பிறவற்றையும் இழப்பவராகிறார்கள். இவ்வாறு சதுர்வித புருஷார்த்தங்களுள்ளும் தர்மமே ப்ரதானமான தாகையினாலேயே அது முதலில்வைத்து எண்ணப்படுவதாயிற்று. இனி ஏனைப் பொருளும், இன்பமும், வீடும் ஆகியவற்றிற்கும் தர்மமே ஆதாரமாகின்றது என்பதன் உண்மையை ஆராய்வோம்.

(தொடரும்.)

T. N. அப்பனையங்கார்,
மதுரை.

விசிஷ்டாத்வைதம்.

(76-ம் பக்கம் தொடர்ச்சி.)

இதுவரையுங் கூறியவாற்றால் விசிஷ்டாத்வைதமென்பதற்குச் சேதநாசேதனங்களை சரீரமாகவுடைய ப்ருஹ்மவஸ்து பிறிதொன்றில்லையென்பதும், அவ் வஸ்து சேதநாசேதனங்களை சரீரமாகவுடையதாயிருந்தாலும், சேதநாசேதனங்கட்குரிய விகார சுகதுக்கங்கள் அதற்கு உண்டாவதில்லையென்பதும், ப்ருஹ்மமே நிமித்தோபாதான ஸஹகாரி காரணமாயிருக்குமென்பதும், எல்லாம் ப்ருஹ்ம ஸ்வரூபமென்பதும், எல்லாச் சொல்லும், அவனையே குறிப்பிடுமென்பதும், இவ் விஷயத்தை வேதாந்தத்தின் நுண்பொருள் அறிந்தார் வெளியிட்டார் என்பதும் உரைக்கப்பட்டன.

இந்த விசிஷ்டாத்வைதம் என்ற சொல்லானது பல்வேறு வகையாகக் கூறப்பட்ட வேதத்துக்குப் பொருத்தமாகக் கூறும் பொருளைப் பெற்றிருக்கிறதென்பதை ஆராய்வோம்.

வேதம் தமோகுண, ரஜோகுண, சத்வகுணங்களோடு கூடிய சேதனர் அவரவர் நின்ற நின்ற அளவுக்கீடாக இதங்களைக் கூற வந்ததாகையால் அவ்வேதத்திற் சொல்லப்பட்டவை யெல்லாம் ஸத்யமென்றே கொள்ளவேண்டும். வேதம் எல்லாருக்கும் நன்மை யுரைக்க வந்ததாயிருக்குமாகில் பரஹிம்ஸா ரூபமான * அபிசாரமாகிய * சியேநயாக முதலியவற்றை விதிக்கக் கூடாது. "ச்யேநேநாபிசரந்யஜேத" என்று விதித்தபடியால் தீமையையும் கூறியதெனக் கொள்ளவேண்டியதன்றோ! அங்ஙனமிருக்க நன்மையை யுரைக்க வந்ததென்பது எவ்வாறு பொருந்துமெனின்? வேதம் பலவிடங்களிலும் அதிருஷ்ட பலங்களைச் சொல்லிப் போந்தது. அவ்வதிருஷ்ட பலங்களை சாஸ்திர விசுவாசமுடைய பெரியோர்களே நம்புவார்கள் கண்கூடான காட்சிக்கு விஷயமாகின்றன எவையோ அவையே உண்மையாம். மற்றவை யெல்லாம் பொய்யாமெனக் கொள்கிற நாஸ்திகர் முதலானவர்கள் நம்புவதில்லை. இங்ஙனம் நம்பாதிருக்கிற இவர்களும் உண்மையென விசுவாசம் கொள்வதற்குச் சியேநயாக முதலிய அபிசார யாகங்களை விதித்தலால் அபிசாரயாகங்களை விதித்த சுருதியோடு வாசியற எல்லாம் பிரமாணமாகுமெனக் கொள்ளக் கிடக்கின்றன.

வேதத்திற் கூறப்பட்ட வேறுபாடுகளாவன:—

பேதசுருதி, அபேதசுருதி, ஸகுணசுருதி, நிர்க்குணசுருதி, கடகசுருதி முதலியனவாம். பேதசுருதியாவது ஆத்மாவேறு, பரமாத்மாவேறு என்று சொல்லுவதாம். இவ்விசிஷ்டாத்வைத பதத்தில் அத்வைதம் என்றதனால் ஈசுவரனையும், விசிஷ்ட பதத்தால் சேதநாசேதநர்களையும் குறிப்பிட்டது. இதனால் பேதசுருதிக்

* அபிசாரமாவது:—ஒருவனை ஹிம்சிக்கைக்காக அதர்வண வேதத்திற் சொல்லப்பட்டபடி மந்திரங்களினால் செய்யப்படுகிற சியேநயாக முதலிய கர்மமாம். இது, மாரணம், மோஹனம், உச்சாடணம், வித்வேஷணம், ஸ்தம்பனம், வசீகரணம் என்று ஆறு வகைப்படும்.

* சியேநயாகமாவது:— கழுகினாற் செய்யும் யாகமாம். இவ்யாகம் விரோதிகளைக் கொல்வதற்காகச் செய்வதொன்றாம். இவ்யாகத்துக்குரிய விதி முறைப்படி செய்வார்களாகில் விரோதிகள் நாசமடைவார்கள். இதை பிரத்யக்ஷமாயறியலாம்.

குப் பொருள் பொருத்தமுற்றிருப்பதறிக. அபேத சுருதியாவது பிர்ம்மம் ஒன்றேயுளது வேறொன்று மில்லையென்று சொல்லப்படுவதாம். இவ்விசிஷ்டாத்வைத பதத்தில்—அத்வைத மென்றதனால் சேதநா சேதனங்களை சரீரமாகவுடைய பிர்ம்மம் பிறிதொன்றில்லையென்று சொல்லப்பட்டது. இதனால் அபேத சுருதிக்குப் பொருள் பொருத்த முறக்கூறப்பட்டது என்று ஈண்டறியத்தக்கது. ஸகுண சுருதியாவது—பிர்ம்ம வஸ்து ஞான, சக்தி ஸௌசீல்யாதி குணங்களையுடையதென்று சொல்வதாம். இவ் விசிஷ்டாத்வைத பதத்தில் சேதநா சேதனங்களை சரீரமாகவுடைய பிர்ம்மமென்றுரைக்கப்பட்டது. ஒப்புயர்வற்றவனாகிய ஸர்வேசுவரன் சேதநா சேதனங்களை சரீரமாகக்கொண்டது தன் ஸௌசீல்யாதி குணங்களாலேயாம். ஆதலால் இதில் ஸகுண சுருதிக்குப் பொருள் பொருத்த முற்றிருப்பது ஆராயத்தக்கது. நிர்க்குண சுருதியாவது பிர்ம்மத்திற்கு ஹேயகுணங்கள் ஒன்று மில்லையென்று சொல்வதாம். இவ்விசிஷ்டாத்வைத பதத்தில் பிர்ம்மம் சேதநா சேதனங்களை சரீரமாகக் கொண்டிருந்தாலும் சேதநா சேதனங்கட்குரிய சுகதுக்க விகாராதிகள் சர்வேசுவரனுக்கில்லையென்றுரைக்கப்பட்டபடியால் இதில் நிர்க்குண சுருதிக்கும் பொருள் பொருத்தமுற்றிருப்பதும் நோக்கத்தக்கது. கடகசுருதியாவது-பிர்ம்மம் சேதநா சேதனங்கட்கு அந்தர்யாமியாய்ச் சேர்ந்திருக்கும் நிலையைக் கூறுவதாம். சேதநா சேதனங்களை சரீரமாகவுடைய பிர்ம்மம் என்பது இவ் விசிஷ்டாத்வைத பதத்துக்குப் பொருளாதலால் இக்கடக சுருதிக்கும் பொருள் இசைந்திருப்பது கருதத்தக்கது.

நியாயவேதாந்த வித்வான்
தேசிக வரதாசார்யர், ஸ்ரீரங்கம்.

(தொடரும்.)

திருமோகூர் ஸ்ரீ காளமேகப் பெருமாள் ஸந்நிதியின் மஹாஸம்ப்ரோக்ஷண மஹோத்ஸவம்

திருவாய் மொழி.

தாளதாமரைத்தடமணிவயற்றிருமோகூர்
நாளுமேவிநன்கமர்ந்துநின் றசுரரைத்தகர்க்கும்
தோளுநான்குடைச்சுரிகுழற்கமலக்கட்கனிவாய்க்
காளமேகத்தையன்றிமற்றொன்றிலம்கதியே.

இடர்கெடவெம்மைப்போந்தளியாயென்றென்றேத்திச்
சுடர்கொள்சோதியைத்தேவரும்முனிவருந்தொடரப்
படர்கொள்பரம்பணைப்பள்ளிகொள்வான்திருமோகூர்
இடர்கெடவடிபரவுதும்தொண்டீர்வம்மினே.

மற்றிலமரண்வாண்பெரும்பாழ்தனிமுதலாச்
சுற்றுநீர்படைத்ததன்வழித்தோன்முனிமுதலா
முற்றுந்தேவரோடுலகுசெய்வான்திருமோகூர்
சுற்றிநாம்வலஞ்செய்யநந்துயர்கெடுங்கடிதே.

நாமடைந்தநல்லரண்நமக்கென்றுநல்லமரர்
தீமைசெய்யும்வல்லசுரரையஞ்சிச்சென்றடைந்தால்
காமரூபங்கொண்டெழுந்தளிப்பான்திருமோகூர்
நாமமேநவின்றெண்ணுமினேத்துமினமர்காள்.

என்று பாராட்டி நம்மாழ்வாரால் மங்களாசாசனஞ் செய்யப்பெற்ற திருமோகூர் என்னும் திவ்ய தேசத்தில் ஸ்ரீ காளமேகப் பெருமாள் ஸந்நிதியில் தர்சநீயமான ஸ்ரீகேதகீவிமானத்துக்கு ஸ்தூபி செய்துவைத்து சுற்றுக்கோவில்களின் விமானமுதலியவற்றின் ஜீர்ணோத்தாரணமும் செய்து பகவத்கிருபையை முன்னிட்டு ரக்தாக்ஷி-௵ வைகாசி-௴ 25-௳ சனிக்கிழமையும் புஷ்ய நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் ராத்திரி விஷ்வக்சேநாராதனமும் மிருத் ஸங்கிரகணமும் செய்து தொடங்கப்பெற்று மேற்படி வைகாசி-௴ 29-௳ புதன்கிழமையும் நவமியும் உத்திர நக்ஷத்திரமும் அமுதயோகமும் நிஷ்பஞ்சகமுமான சுபமுகூர்த்தத்தில் காலை நாழிகை காலேமாகாணி (11—6—24 காலை மணி 6=7க்குள் ரிஷபலக்கினத்தில் மஹாசம்புரோக்ஷணம் நடைபெறும். (அன்று ராத்திரி பெருமாள் கெருடாரூடராகத் திருவீதி யெழுந்தருளி சேவை சாதிப்பார்.)

வாழ்த்து.

நாளும்மோகனவல்லிநலன்கொளும்
காளமேகம்கவின்பொழிகண்களும்
தோளுமார்புந்துவரிதழுந்துணைத்
தாளும்வாழ்கசகதலம்வாழவே.

122

ஸ்ரீ:

பிழை திருத்தம்.

மூன்றும் பகுதி 59-ம் பக்கம் 4-வது பாராவை, இதில் பூர்வ பாகத்தின் வழிநூல்களான தரும சாஸ்திரங்களில் ஆராதனமான கர்மாவினுடைய நிரூபணத்தில் ஆராத்யனான ஈசுவரனுடைய ஸ்வரூப நிரூபணமும், உத்தரபாகத்தின் வழிநூல்களான இதிஹாஸாதிகளில் ஆராத்யனான ஈசுவர ஸ்வரூப நிரூபணத்தில் ஆராதனமான கர்மாவினுடைய நிரூபணமும் இன்றியமையாததாய் ஏட்பட்டிருக்கும், எனத் திருத்திக்கொள்க.

ஷை பகுதி 61-ம் பக்கம் 13-வது வரியில் 'ஸாக்ஷாத் பகவத் தத்வர்களான ஆழ்வார்களே, என்றிருப்பதை ஸாக்ஷாத் க்ருத பகவத் தத்வர்களான ஆழ்வார்களே எனத் திருத்திக்கொள்க.

ஷை பக்கம் 3-வது பாரா 16-ம் வரியில் திருவாய்மொழி மந்த்ரசேஷத்தினுடைய விவரணமாயும் என்றிருப்பதை, திருவாய்மொழித்வயத்தின் விவரணமாயுமெனத் திருத்திக் கொள்வதோடு திருமொழி மந்த்ரசேஷத்தின் விவரணமாயுமெனச் சேர்த்துக் கொள்க.

இப்பகுதி 82-ம் பக்கம் 2-வது பாரா 5-ம் வரியில் வியுத்பத்தியென்று சொல்லப்படும், என்றிருப்பதை வியுத்பத்தியென்று சொல்லுவர் எனத் திருத்திக்கொள்க.

84-ம் பக்கம் 4-வது பாரா 2-ம் வரியில் புராணாதிகளிற் சொல்லுகின்றன என்றிருப்பதை புராணாதிகள் சொல்லுகின்றன, எனத் திருத்திக்கொள்க.

மெழுகேபோல் உருகிய மனத்தையுடைய அவன் எவ்வாற்ருனும் தான் நினைத்த தையலைப்பெற்று இன்புறுவதைத் தனக்கு உறுதியாகக் கடைப்பிடித்துள்ளான். ஆகையால் அதனை நிறைவேற்று தற்பொருட்டு அவன் இப்பொழுது உலகமெல்லாம் நிலைகுலையுமாறு யோகநிஷ்டையை மேற்கொண்டுவிட்டான்.

அஃதவ்வாருக; அவனுடைய தேவியான அம்பிகை, பூர்வத்தில் தான் கொலைத்தொழிலாளஞன தக்ஷனுடைய புதல்வியாய்த் தோன்றின பழியை நினைத்து, தன் சரீரத்தை வெறுத்து நீக்கினுள். நீக்கினவள் பிறகு, பர்வதராஜன் புத்ரியாய் ஜனித்துக் கண்ணுதற்கடவுளைக்கணவனுகப் பெறவேண்டி, தீவிரமான தவம்புரியலானுள். அவள் இப்போது அந்தப் பாண்டியதேசத்திலடைந்து அங்கயற்கண்ணியென்னும் பெயர்வாய்ந்து விளங்குகிருள். ஆதலால் அவ்விருவருக்கும் திருமண மூடிவதாயின் நும்மை அரிதிற் பற்றிய அச்சமும் அகன்று விடுவதாகும். அவர்கள் செய்கிற தபஸின் மஹிமையால் யாம் அவர்கட்கு ப்ரத்யக்ஷமாகி, அவர்களுடைய அபீஷ்டத்தின்படி விவாஹத்தை நிறைவேற்றிவைக்க விரும்புகின்ரேம். அன்றியும் அதிசிக்ரமாக, தேவவிரோதியும் துராத்மாவுமான தாரகாசுரனை வதைத்து உலகத்தை உய்விக்கக் கருதியுள்ளோம். ஆதலால் நீவிரனைவரும் அவரவர்க்குரிய ஸ்தானத்தையடைந்து அங்கே ஸகலவிதமான வைபவங்களோடும் பழமைபோலவே பயமில்லாது வாழ்வீர்களாக;' என்று காகுஸ்தன் கட்டளையிட்டருளினுன். அதுகேட்டுப் போர உகந்த அயன் முதலான அமரர்கணங்களெல்லாம் அஞ்சலிஹஸ்தர்களாய், மும்முறை தாழ்ந்து வணங்கி, உடல் புளகங்கொண்டு கண்ணீரரும்பத் தத்தம் இருப்பிடம் ஏகினுர்கள்.

மணம் புரிவித்தல்.

அவ்வகையாகச் சிலநாட்கள் கழிந்தவாறே சிவபெருமான் தன் தவநிலை முற்றுப்பெற்றுக் கண்களை விழித்து நோக்கினுன். அங்ஙனம் நோக்கினவன் தன் முன்னிலையில் திருமால் காட்சியளித்தலைக் கண்ணுரக் கண்டு களிப்புற்ருன்.

காளமுகிற்புரைகட்டழகும்பொன்
வாளவிர்பட்டுடைவாசமும்வாச
நாளமலர்த்திருநண்ணியமார்பும்
தோளுமுரத்திடைதோன்றியமறுவும்,

மின்னுகவுத்துவமணியும்வெயிற்பொன்
மன்னுகிரீடமும்மலர்முகநிலவும்
பொன்னணியாரமும்மலையுறழ்புயமேற்
றுன்னியவளையொடுதொடிகளுமிலக,

மேருவெனத்திகழ்வினதைகுமாரன்
பாரமியற்றுபணைப்புயமேறித்
தேரினடத்துதிருத்தனையன்பின்
வாரிதியொத்துவரும்படிகண்டான்.

அப்போது ஸர்வேசுவரன், மஹாமேரு பர்வதத்துக் கொப்பான வைனதேயனாகிற வாஹனத்தின்மீது இவர்ந்து, கருணையங்கடல் கரையின்றியே வருவதுபோல வந்து தோன்றினான். தோன்றினவன் நீலமேகச்யாமளமான திருமேனியோடு, வைத்த கண் வாங்கவொட்டாத வடிவழகுடையவனாயிருந்தான். பீதகவாடையுடுத்த திருவரையும், அலர்மேல் மங்கையான திருமகட்கினிய உறையுளாய்த் திகழும் திருமார்பமும், ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவும், ஆசிரித ரக்ஷணார்த்தமாகத் திருவாழியும் திருச்சங்கும் முதலான ஆயுதங்களைத் தாங்குகிற சதுர்புஜங்களும், திவ்யமான தேஜஸ்ஸோடு குளிர்ச்சியுடையதாய் மலர்ந்திருந்த திருமுக மண்டலமுமாக ஸேவை ஸாதித்தருளினான். ஒளிவிடுகின்ற பசும் பொன்னாலியன்ற கிரீடமும், ஹாரமும், கேயூரமும், கௌஸ்துபாபரணமும் முதலிய பூஷணங்களெல்லாம் அவன் அணிந்திருத்தலான் அழகுபெற்று விளங்கின.

இவ்வாறாக எம்பெருமான் தெரிசனந்தந்த சமயத்தில் எல்லையில்லாத இன்பவெள்ளத்தில் மூழ்கின ஈசுவரன், தன் இரு விழிகளாலும் அவனைப் பருகுவான்போல நோக்கி அவனுடைய பாதாரவிந்தங்களில் பணிந்தான். பணிந்தவன் பின்னர் எழுந்திருந்து, அவனோடு பெரிதும் அளவளாயி, வேதமந்திரங்களால் அவனை விரிவாக வாழ்த்தலானான். அவ்வகையாக அவன் வாழ்த்தியதைச் செவியாரக் கேட்டிருந்த செங்கண்மால் உவகைநிறைந்த உள்ளத்தோடு, 'ஓ மஹானுபாவனே! நீ இந்த வனத்தின்கண் நெடுநாளாகத்

தவம்புரிகின்றாய்; அதுகாரணமாக நினது சென்னியினின்றுமெழுந்த செந்தழலானது உலகங்கள் மூன்றினையும் ஒருங்கவிக்கத் தலைப்பட்டமையால் ஊழித்தீயினும் கொடியதாயிற்று; ஆதலால் நீ யாது காரணம்பற்றி இம் மஹாரண்யத்தில் தபோநிஷ்டையை மேற்கொண்டனை யென்பதை எள்ளளவும் தாமதமின்றி எமக்கு உரைசெய்வாயாக; நினது மனத்துட்கொண்ட எண்ணத்தை நிறைவேற்றுவித்தற் பொருட்டே யாம் ஈண்டு எய்தியுள்ளோம்; ஆதலால் ஒழுக்க நெறிக்கண்வழுவாது உத்தமமான தவமியற்றுகின்ற நீ விரும்பிய பயனை விரைவிற்பெற்று இன்பமுற்று வாழ்வாயாக:' என்று இனிமையாய் எடுத்துரைத்தான்.

அதுகேட்டு மிகவும் அகமகிழ்வடைந்து ருத்ரன் பின்வருமாறு பிரார்த்தித்துக்கொண்டான். எல்லாத் தேவரினும் மேம்பட்ட எம்பெருமானே! வேதஸ்வரூபியான பக்ஷிராஜனை வாஹனமாகக் கொண்டவனே! அனைத்துலகங்களையும் அளித்தற்றொழிலுடைய அச்சுதனே! குறையொன்றுமின்றி எல்லாம் நிறைந்த குணக் கடலே! பிறப்பிறப்புக்களற்ற பெரியோனே! மலையரசன் மடமகளான கவுரியென்பாள் கணவனை யடைதல்வேண்டி நீண்டகாலமாக நோற்று வருகின்றாள்; அவள் நற்குணங்களாலும், நற்செயல்களாலும், அழகினாலும் தன்னை யொப்பார் பிறரில்லாமையால் தனக்குத் தானே நிகராகச் சொல்லத்தக்கவள்; அவளைத் துணைவியாகப் பெற்று இன்பம் எய்துவதற்கு என் மனம் அவாவுகின்றது; ஆதலால் அடியேன் அவளை மணம் புணருமாறு அனுக்ரஹிக்கவேண்டும்:' என்று காமசரங்களால் கருத்தழிந்தவனான முக்கண்ணன் மொழிந்த வார்த்தைகளைக் கேட்டு மாயவன் மனங்களித்தான்.

அதன்பிறகு அவன், சந்த்ரனை ஜடையிலே தரித்த சங்கரனை நோக்கி, 'யாவர்க்கும் மேலான தேவனே! வெண்மைநிறமுள்ள பல்வரிசையோடு மந்தஹாஸம் பொருந்திய முகத்தையுடைய மங்கையர்க்கரசியான கவுரி நின்னையே மணவாளனாக வரிக்கக்கடவள்; அன்னவளோடு நீயும் காம புருஷார்த்தத்தை அடைந்து சுகித்திருக்கக் கடவை; அன்றியும் இவ்வனத்தின்கட் பொற்றாமரையென்று ஒருபுஷ்கரணியுண்டு; அதன் கரையினருகாக அஷ்டாங்க விமானமொன்று அமையப் பெற்றுள்ளது; அதுவே யாம் அகலாதுறையும் ஆலயமாகும்; அவ் விமானத்திற்கெதிரே எமது ஸந்நிதி

யில் நீ எமக்கு வழிபாடியற்றுவாயாக; அதனுல், எம்மிடம் அன்பு புரிகின்ற அடியார் குழாத்துள் தலை சிறந்து விளங்கும் தகுதியை யும் நீ அடையக்கடவை; அந்த பாகவதோத்தமர்கள் நின்னுல் விரும்பிக் கருணைபாலிக்தற் குரியர். அவ்விடத்திலிருந்துகொண்டு நீ நின்னைப் பிரார்த்திப்பவர்களுக்கு இஷ்டஸித்தி யுண்டாகும்படி அனுக்ரஹிப்பாயாக. அதனுல் நீ வானவர் போற்றும் வாழ்க்கை யும் பெற்று நீடுமிகாலம் நிலைபெற்றிருக்கக் கடவை:' என்று எம் பிரான் அருளிச்செய்து பின் அந்தர்த்தானமானுன்.

அவ்வாறு அவன் மறைந்தருளுந் தருணத்தில் வஸிஷ்டர் முத லான ஸப்தரிஷிகளும் அருந்ததி முதலானுர் எழுவர் பத்நிய ரோடும் அவ்விடத்தை அடைந்தனர். அவர்கள் பகவானிடத்தில் நிறைந்த பக்தியுள்ளவர்கள். ஆதலால் அவர்கள் அஷ்டாங்க விமா னத்தை அன்புடன் கைதொழுது பரவினுர்கள்; அதனுள் எழுந் தருளியிருக்கும் மாயவனை மனமாரப் புருஷ சூக்தத்தினுல் புகழ்ந்து போற்றினுர்கள்; அதனுல் உடம்பு பூரிக்குமாறு உவகை கொண் டார்கள்; ஸாஸ்த்ரோக்தமான முறையில் அவனை அருச்சித்தனர்; பலகால் ப்ரதக்ஷிண நமஸ்காரங்களும் செய்தனர். பின்னர் அவர் கள் விடைகொண்டு திரும்பினுர்கள். அப்போது அவர்களைப் பார்த்து, 'முனிவர்காள்! நீவிர் ஜடாதரனை பசுபதிக்கு மங்கள முண்டாக வதுவை செய்வித்துப் பின்னர் நமதிடம் செல்லுமின்' என நாராயணன் நவின்றருளினன்.

அதனை முனிவர்கள் மிகுந்த விருப்பத்தோடு அங்கிகரித்தார் கள். அவர்களனைவரும் உடனே ஹிமவத்கிரியின் சாரலை அடைந் தனர். பர்வதராஜன் அவர்களிடத்தில் பயமும் பக்தியும் உடை யவன். ஆதலால் அவன் அவர்களுக்குப் பணிவிடை செய்தற் பொருட்டு அவர்களை எதிர்கொண்டு வரவேற்றுன். மஹாதபஸ்வி களான அந்த ரிஷிகளை அவன் பலமுறை பணிந்து போற்றினுன்; அவர்களுக்கு ஆஸனமளித்தான்; அர்க்கிய பாத்தியங்களும் ஆசம னீயமும் உதவி உபசரித்தான்.

அதன்பிறகு அவன், 'ஓ முனிபுங்கவர்களே! நீங்கள் என்னி டத்திற்கு எழுந்தருளியதனுல் நான் க்ருதார்த்தனுனேன்; அதனுல் என்னுடைய குலமுழுதும் தூயதாயது; அன்றியும் பெருந்தகை யாளரான உங்களுக்கு யான் செய்தலால் நிரம்புதற்குரிய குறை

யொன்றுமில்லை; ஆதலால் உமது வருகையின் காரணம் என்னால் உய்த்துணரமுடியாததாகும்; ஆகவே, அதனை எனக்கு விளக்கமாக விளம்பியருளல்வேண்டும்:' என்று அவர்களிடம் பிரார்த்தித்தான்.

அதுகேட்ட அருந்தவர், 'கைலையங்கிரிக்குத் தலைவனான நீல கண்டன் நின் திருமகளைக் காதலிக்கின்றான்; அதனால் நீ பாக்கிய முடையவனாகிறாய்; ஆகையால் ஓ பர்வதராஜனே! நீ அவளை அவனுக்குப் பாணிக்ரஹணம் செய்து தருவாயாக,' என்று கட்டளையிட்டனர். மலையரசன் 'அது மிகவும் நன்று' என்று சொல்லி அவ்வாறே செய்வதற்கு மனங்கொண்டான். கொண்டவன் தன் உயிர்த்துணைவியான மேனைக்கு அதனை யுணர்த்தினனாக அவளும் அதற்கு உடன்பட்டனள்.

அதன்பின்பு அவர்களெல்லோரும் அமரர்கணங்கள் புடைசூழக் கைலாசத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். விவாஹத்திற்கு வேண்டும் பொருள்கள் யாவும் விரைவிற் சேகரிக்கப்பட்டன. கல்யாணத்திற்கேற்ற சுபமுகூர்த்தமும் கணித்தறியப்பட்டது. வெள்ளியங்குன்றில் திவ்யமான மணிமண்டபத்தில் அனைவரும் அவரவர்க்குரிய இடங்களில் அமர்ந்தனர். பின்பு ஹோமாக்னி வளர்க்கப்பட்டது. வேதவிதிப்படி உதக பூர்வகமாகக் கவுரியைக் கங்காதரனுக் களித்தார்கள். இவ்வாறு ஈசன் திருமணம் இனிதாக நிறைவேறிற்று. த்ரிநேத்ரனான சிவன் கவுரியோடுகூடி திவ்ய போகங்களை அனுபவிக்கலானான். அதனால் தேவர்களும், கந்தர்வர்களும், யக்ஷர்களும், கின்னரர்களும், முனிவர்களும், சித்தர்களும் சாரணர்களும் முதலானோர் அனைவரும் ஆனந்தசாகரத்தில் அழுந்தினார்கள். ஆதலால் இமையவரெல்லாம் இத்தகைய இன்ப மெய்துதற்கு ஸ்ரீவைகுண்ட நிகேதனனான ஸர்வேசுவரனுடைய திருவருளே காரணமாயிற்று:'' என்று இவ் வரலாறு முழுமையும் வேதவ்யாஸர் சௌனகாதியர்களுக்கு விளங்குமாறு கூறிமுடித்தார்

பின்னும் அவர், ஆழ்ந்து நுணுகிய கேள்வியையுடைய அருந்தவர்களைப் பார்த்து, அவர்கள் மேலுங் கேட்கவிரும்புவது யாதென்று வினவினர். அதைக்கேட்டு அவர்கள் நிறைந்த ஆர்வமுடையவர்களாய், "பராசரமுனியின் பரம காருண்யத்தால் வையத்தை வாழ்விக்க வந்தவரே! கரதலாமலகமாகக் கல்விநிலை கண்டவரே! வேததுல்யமான இப்புராண வரலாற்றின் தொடர்

பினேயே அடியோங்களுக்கு விளம்பியருள்வீராக" என்று வேண்டிக்கொண்டார்கள். அவ்வாறே அவரும் அதனை மேலே சொல்லத் தொடங்கினர்.

"க்ருதமாலாநதி தீரத்தில் கதலீவன க்ஷேத்ரத்தில் விஸ்வகர்மாவினு லமைக்கப்பட்ட விமானத்தின்கண்ணே பரமபுருஷனுன பகவான் எக்காலத்திலும் நீங்காமல் எழுந்தருளியுள்ளான். க்ருதயுகாதியில் ஸநகாதி முனிவர்களின்பொருட்டு ஸ்ரீமந் நாராயணனை நான்முகன் வேதவிதிப்படி ஆராதித்தான். அதனுல் அவர்களுக்கு அருள் சுரந்தவனுன வாசுதேவன், வைகுந்த வான் போகந்தன்னை யிகந்து, அவனியை அடைந்து, அவ் வஷ்டாங்க விமானத்திலே திருக்கோயில் கொண்டான்.

கோடிசூர்ய ப்ரகாசமாய் விளங்குகின்ற அவ் விமானம் பாண்டியனுட்டின் பல விடங்களிலும் பரவி உலாவுவதாகும். அதன் இருபுறங்களிலும் வேகவதியாறு வெள்ளமிட்டோடுகின்றது. அதனுல் அது, அன்றலர்ந்த புஷ்பங்களால் அணிபெறத் தொடுத்த ஹாரம்போல அவ் விமானத்திற் கலங்காரமாயுள்ளது. அக் காரணத்தினுலேயே அந்த நதி க்ருதமாலை யென்னும் பெயரோடு பெருமை யெய்துவதாயிற்று. இன்னும் எட்டுருப்பிலங்கும் இவ் எழிலுறு விமானம், பாற்கடலிலும், பரமவைகுண்டத்திலும், சூர்யமண்டலத்தும், மதுரையிலும், கோஷ்டிபுரத்திலும் எம்பெருமானுக்கு இருப்பிடமாகின்றது. அது மிகவும் உன்னதமானது; சுவர்ணகசிதமானது; ஆதலால் அது மேருமலைக்கு நிகராகும் மேன்மையுடையதாய்ச் சொல்லத்தக்கது. அதுவேயுமன்றி அது விசித்ரமான வேலைப்பாடுகள் பொருந்தியது.

அதன் சாயையானது அதனைச்சுற்றி எட்டுயோஜனை எல்லையளவும் செல்லுவதாகும். அந்த தேசத்தில் வஸிப்பவர்களுடைய புண்ணியம் ஒருவராற் புகலுந் தரத்தினதன்று. அங்குள்ள விலங்குகளும் பறவைகளும் முதலாகவுள்ள அசேதனங்களுங்கூட அழிவில்லாத முக்தியை அடைகின்றன. இவ்வாறுனல் அத்தகைய விமானத்திற்கருகே தவமிழைப்பவர்களும் பக்திபுரஸ்ஸரமாகத் திருவாராதனம் செய்பவர்களும் அடையும் பலன்களுக்கு அளவேயில்லை யென்பது சொல்லவும் வேண்டுமோ?

திரிவிக்ரமாவதாரமெடுத்து உலகமுழுதும் தன் திருவடியா லளந்த மஹாவிஷ்ணுவினுடைய வரப்ரஸாதத்தால், இவ்விடத்தில் தங்கிய ஸப்தரிஷிகளும் தவமாகிய தனத்தைப்பெற்று மனந்தூய ராயினர். அவர்களுக்கு அஷ்டமாஸித்திகளும் கைவந்தன. அவர் கள் இகத்தினும் பரத்தினும் இன்பமெய்தி வாழ்ந்தார்கள். அது மட்டுமன்று. நன்மையொன்றில்லா ஏமலியேயாயினும், பால்குடி மாறாப் பாலகராயினும், அருமறைதெளியா அறிவினராயினும் அவ் வெம்பிரான் கோயிலருகே அரைக்கணமேனும் அமர்ந்திருப் பாராயின், அவர்கள் சகலமான பாதகங்களினின்றும் கழுவப்பட்டு, நல்லறிவு நிரம்பிப் பரமபதத்தைப் பெறுவார்கள். திருமாலுறை யுந் திருப்பதியான இம் மதுரையின் மான்மியத்தை மானுட னொருவன் கேட்க முயல்வானாகில், அவன் அசுவமேதம் செய்த அரும்பெரும் பயனை அடைந்தவனாவான். அவன் முக்தியும் பெறு தலில் ஐயமே இல்லை:'' என்று இவ்வளவும் சௌனகாதியர்க் கெடுத் தியம்பி, வேதவ்யாஸர் மீளவும் அவர்களை நோக்கி, "ஓ முற்றத் துறந்த முனிவர்களே! தத்துவ முழுதுணர்ந்த ஸத்வகுணமுடை யவர்களே! இவையனைத்தும் யான்கேட்க நாரதர் எனக்குச் சுருங்க வுரைத்தார். நீங்கள் பின்னும் எதனைக் கேட்க விரும்புகின்றீர்கள்'' என்று வினவினர். அதற்கு அவர்கள் அங்குள்ள தீர்த்தங்களின் விசேஷங்களை விரிவாய் வெளியிடுமாறு வேண்டிக்கொண்டார்கள். அவ்வாறே வியாஸரும் விளம்புவதானார்.

காசிபர் முதலாயினார் வரம் பெறுதல்.

"எம்பெருமான் ஸந்நிதியின் ஈசான்யதிக்கில் ஸப்தஸாகரங் களும் ஒன்றுகூடின ஒரு தீர்த்த விசேஷமுண்டு. அது எழுகட லென்று பெயர் கூறப்படுகிறது. முன்னொருகாலத்தில் மார்க்கண் டேய மஹரிஷி தான் தீர்த்தமாடுவதன் பொருட்டு நெடுங்காலம் தவம்புரிந்து அவ்வேழு ஸமுத்ரங்களையும் அங்கு வரவழைத்தார். அவர் விரும்பியபடியே அவையாவும் மிகுந்த உத்கோஷத்துடன் அவ்விடத்தை அணுகின. திரிபுரஸம்ஹாரஞ்செய்த ருத்ரனுடைய வில்லும், மிதிலா நகரத்திலே ஸ்ரீராகவன் வளைத்து முறித்த வில் லும் ஆகிய அவை யிரண்டினுஞ் சிறந்தனவென்று சொல்லுமா

ருள்ள பல அலைகளோடுங்கூடி முழங்குகின்ற அவ்வேழு கடல்களும் ஸ்ரீமந் நாராயணனுடைய ஸந்நிதியின் மாஹாத்மியத்தால் அங்கே ஒரு பொய்கையினளவாக அடங்கி ஒடுங்கித் தோற்றஞ் செய்தன.

அன்னப் புட்களும், நீர்க்காகமும் முதலான பலவகைப்பட்ட பக்ஷி ஜாலங்களும் அதனிடத்து எப்பொழுதும் ஸப்தமிடுகின்றன. பொன்னிறமான தாமரையும், குவளையும், நீலோத்பலமுமாதிய நீர்ப்பூக்கள் பூத்தலால் அது பொலிவுபெற்று விளங்குகிறது. சுற்றிலுமுள்ள அதன் கரையினிடத்து மாவும், பலாவும், வாழையும், தெங்கும், புன்னைகமும் முதலிய விருக்ஷஜாதிகள் வரிசை வரிசையாய் நின்று நிழல்செய்தலால் அப்பொழில் அழகுடன் விளங்குகின்றது.

இவ்வாறுள்ள அவ் வெழுகடலாகிய தீர்த்தத்தில் தேவர்களும் முனிவர்களும் தினந்தோறும் வந்து நீராடி நித்யகர்மானுஷ்டானங்களும் செய்துவிட்டுச் செல்லுகின்றார்கள். அதுவேயுமன்றி ஸப்த ரிஷிகளும் அதனை வழிபட்டு அணிமா முதலான அஷ்டமாஸித்திகளும் அடைந்திருக்கிறார்கள்.

இனி அவ்வெழுகடலுக்கு வடகிழக்காக அழிவில்லாத அனந்தன் தீர்த்தம் உள்ளது. சந்திரன் அதில் ஸ்நாநம் செய்து ஸகல ஐஸ்வர்யங்களையும் பெற்றான். பொன்னுலகாளும் புரந்தரனும் அதன் கரையில் அநேக நாட்கள் அருந்தவம்புரிந்து மூன்றுலக்கும் முதல்வனாய் விளங்கினான். அன்றியும் அவ்விந்திரன் ஏவலால் அமரர்கள் யாவரும் அப்புனலின்கண் நாள்தோறும் மூழ்கி நன்மையடைகின்றனர். அவ்வாறே அந்நீரில் திளைத்து, அரம்பையர்களும் விரும்பி விளையாடுகிறார்கள். அது நிற்க,

வேண்டியவற்றை வேண்டியாங்களித்தலால் தவமே உருவெடுத்தாலனைய அத் தடாகத்தின் தெற்கே, எல்லா ஆற்றலுமுடைமையால் ஈசனுக்கு நிகரான காசிபருடைய ஆசிரமம் காணப்படுகின்றது. அது ஒருகாலத்தில் ஏழு முனிவர்களும் ஒன்று கூடித் தவம் செய்யப்பெற்ற ஏற்றமுடையதாகும். வஸிஷ்டரைத் தலைமையாகவுடைய அந்த ஸப்த மாதவர்களும், அவ்விடத்தில்